DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 383/2024

Miscellaneous :

Sessions : PW 9

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | ராஜா |
| Father / Husband Name | நாகப்பன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 21. 05.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது காஞ்சிபுரம் தாலுக்கா காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.02.2024 ம் தேதி மதியம் 3.00 மணிக்கு நான் மதுராந்தகம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது அங்கம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அந்த புகார் மனுவிற்கு மனு ரசீது எண்.146/2024 கொடுக்கப்பட்டு பின்னர் அந்த மனு ரசீதினை 24.02.2024 ம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அந்த புகாரின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.100/2024, பிரிவுகள் 341, 294(பி), 323, 324, 506(2) IPC மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

2. பின்னர் சம்பவயிடம் சென்று சாட்சிகள் அசோக்குமார் மற்றும் குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் 24.02.2024 ம் தேதி நிலையம் ஆஜரான எதிரிகளை 41(a) அறிவிப்பு கொடுத்து விடுவித்தேன். பின்னர் வழக்கில் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் சரண்யா மற்றும் லலித்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்னர் காயம்பட்ட நபர்களுக்கு மருத்தவர் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவான 341, 294(பி), 323, 324, 506(2) IPC மற்றும் 4 of TNPHW Act லிருந்து 341, 294(பி), 323, 326, 506(2) IPC மற்றும் 4 of TNPHW Act ஆக மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் விசாரணையை முடித்து

எதிரிக்கு எதிராக பிரிவுகள் 341, 294(பி), 323, 326, 506(2) IPC மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

4. புகார் பெற்றதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரை உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவம் இடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும், ஆவணத்தின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக மிகைப்படுத்தி இறுதி அறிக்கை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.